வடவர் உயர வகுத்த திட்டங்கள்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம் | சென்னை: ஆவணி 21உ திங்கள் (6—9—54) | வெளியூர்: ஆவணி 22உ செவ்வாய் (7—9—54) | மலர்: 2 இதழ்: 72

பசிக்கும் — பட்டினிக்கும் பகவானை மறந்தது காரணம் அல்ல!

நம் சக்தியை நாம் உணர்ந்தாலன்றி வாழ வழியில்லை!

துறையூர் பொதுக்கூட்டத்தில் அண்ணா விளக்கம்

"இந்த நாட்டில், உழைப்பவர்கள், பாட்டாளிகள், விவசாயிகள் எல்லோரும் உலகத்திலே உள்ள வேறெந்த நாட்டவரைக் காட்டிலும் அதிகமாக உழைக்கிறார்கள்! உழைத்து உழைத்து மேனி கறுத்திருப்பவர்களும் இந்த நாட்டவர்தான்! என்றாலும், இந்த நாட்டவரால் வாழ முடியவில்லை; வறுமை அவர்களைக் கொட்டுகிறது! பஞ்சம் அவர்களைப் பட்டினியால் வாடச் செய்கிறது! ஏன் இந்த நிலை?—என்ற கேள்வியை, மதவாதிகளிடம் கேட்டோம்; அவர்கள், 'இந்த உலகத்தில் நீ கஷ்டங்கள் பட்டாலும், மேல் உலகத்தில் இன்பம் பெற, இறைவனை வணங்கு; இந்த உலக இன்பங்களெல்லாம் அநித்தியமானவை; இவையெல்லாம் ஆண்டவன் செயல்; அந்த உலகத்தை அடைய புண்ணியம் செய்,' என்று உபதேசிப்பர்!

"அந்த உபதேசப்படி, நாம் கட்டாத கோவில்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

திரு—கொச்சி பஸ் வேலை நிறுத்தம்

தொழிலாளர் குறைகளை கவனிக்க அரசாங்கம் கமிட்டி அமைக்கும்

கடந்த பத்து நாட்களாக நடைபெற்றுவந்த திரு—கொச்சி சர்க்கார் பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் நின்றுவிட்டது என்று தெரிகிறது.

இப்பிரச்னையை ஒட்டி உண்ணாவிரதம் இருந்த சட்டசபை உறுப்பினர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தியுள்ளனர்.

தொழிலாளர்கள் சம்பளம் பற்றி விசாரணை நடத்த திரு—கொச்சி சர்க்கார் கமிஷன் நியமிக்க ஒப்புக்கொண்டனர். இதன் பேரில் வேலை நிறுத்தம் முடிவுற்றது என்று தெரிகிறது

எகிப்து பிரதமர் இந்தியா வருவார்

★

கெய்ரோ, செப். 6—

இந்தோனேஷியாவுக்குச் செல்லும் வழியில் எகிப்து பிரதமர் நாசிர், இவ்வாண்டு இறுதியில் இந்தியா வருவார் என்று தெரிகிறது.

இந்தியாவிற்கு வருமாறு கொடுக்கப்பட்ட அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார் என்று தெரிகிறது.

இச்செய்தியை கெய்ரோவில் உள்ள இந்தியத் தூதவர் நவாப் அலி ஜாவர் ஜங் கூறியுள்ளார்.

எகிப்து பிரதமர், கராச்சிக்கும் செல்வார் என்று தெரிகிறது

ஆந்திராவில் கட்டாய இந்தி!

கல்வி இலாகா டைரக்டர் சிபார்சு!

சர்க்கார் உத்தரவு சீக்கிரம் வெளியாகும்

சித்தூர், செப். 6—

ஆந்திர ராஜ்ய கல்வி இலாகா டைரக்டர், இந்தியை விருப்பப் பாடமாக படிப்பதற்குப் பதில், கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார் என்று தெரிகிறது.

ஆந்திர கல்வி போர்டார் இச் சிபார்சுகளை ஒப்புக்கொண்டுவிட்டார்கள் என்றும், இதுபற்றிய சர்க்கார் உத்தரவு எதிர்பார்க்கப்படுவதாகவும், ஆந்திரா கல்வி டைரக்டர் டி. சதாசிவ ராவ் கூறினார்.

இப்போது எஸ். எஸ். எல். சி. தேர்தலில், இந்தியில் மாணவர்கள் பெறுகிற மார்க்குகள் தேர்தலுக்கு தகுதியாக எடுத்துக் கொள்ளப்படுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு, 1955-56-ம் ஆண்டு முதல் அமுலுக்கு வருகிறதாம்.

இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்ற தனது சிபார்சில், கல்வி இலாகா டைரக்டர், தொழில் பிரிவிற்கும் பதில், மூன்றாவது மொழியாக இந்தியை மாணவர்கள் கற்க வேண்டுமென்றும், அல்லது இந்தியை முதல் மொழியாக எடுத்தும் படிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார் என்று தெரிகிறது.

இரண்டாவது பாடமாக நான்காவது படிவம் முதல் ஆறும் படிவம் வரையில் இந்தியை எடுத்துப் படிக்கும் மாணவர்கள், 1955-56 முதல் அமுலுக்கு வர இருக்கும் முறைப்படி, பல்கலைக் கழகப் படிப்பிற்குத் தகுதிபெற இந்தியில் போதிய மார்க்குகள் பெற வேண்டுமென்பது கட்டாயமாகும்.

பகிரங்க விசாரணை நடத்துக!

பி.-சோ. கட்சி தலைமை தீர்மானம்

புதுடில்லி, செப். 5—

பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் தேசீய நிர்வாகக் கமிட்டி, லோகியாவின் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த திரு—கொச்சி மந்திரி சபை இராஜினாமா செய்யவேண்டியது அவசியம் இல்லை என்று பி.-சோ. கட்சியின் தலைமை கருதுகிறதாம்.

ஆனால் தென் திருவாங்கூரில் இப்போது நடைபெறும் மாஜிஸ்திரேட் விசாரணைக்குப் பதில், ஒரு பூரண பகிரங்க நீதி மன்ற விசாரணை நடத்தவேண்டுமென்று தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

நீதி மன்ற விசாரணையில் சர்க்கார் செய்தது தவறு என்று நிரூபிக்கப்படுமானால், சர்க்கார் தானாகவே இராஜினாமா செய்யுமென்று கிருபளானி கூறினார்.

மக்கள் வரிப் பணம் பாழாகும் படலம்!

அவசரப்பட்டோம்; — — அவதிப்படுகிறோம்!

பண்டிதரின் வேதனைக் குரல்?

தென்னவரை வஞ்சித்த திட்டங்களின் அலங்கோலம்

வெள்ளச் சேதம் மண்வளம் வளமாக்கும்!

பிரதமரின் ஆறுதல் மொழி!

வேதனைப்படுவோரிடையே வேதாந்தம் பேசும் விந்தை!

"வடநாட்டைக் குபேர நாடாக்கக் கங்கணம் கட்டிய டில்லி சர்க்கார், சுதந்திரத்தின் பயனை அவர்கள் மட்டுமே அனுபவிக்க வாய்ப்பளிக்கும் முறையில் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டினர். மாற்று நாட்டவர் பார்த்து வியக்கும்வண்ணம் மிகப் பெரிய நீர்த்தேக்கங்களை வடநாட்டில் கட்டியிருக்கின்றனர்.

பக்ரா - நங்கல் கால்வாய் 40 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்ட திட்டம்; அது, அண்மையில் பண்டிதரின் பாராட்டுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.

தாமோதர் பள்ளத்தாக்கு திட்டம் என்ற பெயரில் பல அம்ச திட்டங்கள் நிறைவேறுகின்றன; அணைக்கட்டுகள், மின்சார நிலையங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள் இவை அனைத்தும் அதிலே உண்டு!

கோசி நதித் திட்டம் என்ற பெயரில், 'இந்தியாவின் துயரம்' என்று அழைக்கப்படும் கோசி நதியின் போக்கைக் கட்டுப்படுத்த நேரு சர்க்கார் திட்டமிட்டுள்ளனர்!

கிழக்காசிய நாடுகளிலேயே பெரியதோர் உர உற்பத்திச் சாலையான சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலை, பீகாரிலே, வானளாவி நிற்கிறது!

சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலை—100 கோடி ரூபாய்களுக்கு மேல் செலவிட வேண்டிய திட்டம், ஏறக்குறைய நிறைவேறிவிட்டது!

இப்படி ஐந்தாண்டு திட்டத்திலே காணப்படும் திட்டங்களில், பயன்தரும் திட்டங்கள் எல்லாம், வடநாட்டில், புயல் வேகத்தில் நிறைவேறுகின்றன!

தென்னாட்டிலே, பல திட்டங்களின் பெயர்களைச் சொன்னார்கள்—பெரியாறு திட்டம், மணிமுத்தாறு திட்டம், மாலம்புழா திட்டம்—என்றெல்லாம் கூறினார்கள்; இவைகளில் எதுவும் நிறைவேறியதாகக் காணோம்! பவானி அணை மட்டுமே இங்கு நிறைவேற்றப்பட்டது; அதற்கான மொத்த செலவே ரூ. 3 கோடி தான்!"

தங்கள் இனத்தவரை வாழவைக்க வடநாட்டார் தீட்டிய திட்டங்கள் பலவற்றுள் கோடிக்கணக்கான ரூபாய்கள் பாழ்படுத்தப்பட்டன என்பது நாடறிந்த விஷயம்; இதைப் பலமுறை மறுத்துவந்த பண்டிதரே, பீகார் வெள்ளச் சேதத்தைப் பார்த்து வந்த சோகத்தில் கூறியதைக் கேளுங்கள் :—

"சுதந்திரம் வந்த பிறகு பல பெரிய நீர்த்தேக்க திட்டங்கள் அவசரம் அவசரமாக நிறைவேற்றப்பட்டன; இவைகளில் கிடைத்த அனுபவம், ஏராளமான போதுச் செலவு, தாமதம், பண விரயம் இவைகள்தான் என்று கூறுவேன்;

"அந்தப் பெரிய திட்டங்கள் பிரம்மாண்டமானவை! அவற்றைப் பார்ப்போர் மனம் பிரமித்துப் போகும்! இத்திட்டங்களை நாம் நிறைவேற்றுவது, பெரிய திட்டங்களை நிறைவேற்ற நாம் உறுதி கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதையே காட்டுகிறது;

"ஆனால் ஒவ்வொன்றிலும், திட்டங்களைப் பற்றி சரியான முறையில் ஆராயாமல் வேலைகளைத் துவக்கிவிட்டோம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

"இனிமேல் நன்றாக ஆராயாமல், இதுபோன்ற திட்டங்களை ஆரம்பிக்கக் கூடாது என்பேன்!"

★

சரியான முறையில் திட்டம் தீட்டப்படாததால், மக்களின் வரிப் பணம் கோடிக்கணக்கில் பாழாகியிருக்கிறது.

சர்க்காரின் தாமதத்தால் பக்ரா—நங்கல் திட்டத்தில், நாள் ஒன்றுக்கு, எட்டு லட்சம் ரூபாய்கள் பாழாகும் நிலை ஏற்பட்டதாம்!

வடநாட்டு வெள்ளச் சேதத்தை விமானத்திலிருந்து கண்டறிந்த நேரு பண்டிதர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டிய நேரத்தில், வேதாந்தம் பேசியிருக்கிறார்!

வெள்ளத்தால் ஏராளமான சேதம் ஏற்பட்டாலும், பூமியை அது செழிக்கச் செய்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 6—9—54 திங்கள்

அவர் ஆசை!

"இந்த நசிவிசியிலே என் சைபர, பாக்கு வேண்டி யிருக்கு? அவனவன் உழைத்த அலுப்புத் தீர உறங்குகிறான்; அவனை எழுப்புவதில் உனக்கென்ன இலாபம்?"

என்று நகர் காப்போனை அதிகாரம் செய்தானும், கன்னக்கோல் வைக்க இடந் தேடிய கபடனொருவன்!

"ஏதோ அவன் பழக்கம்; ஒரு திரான் இல்லாவிடின், அவனுக்கு உயிரே உடலில் தங்காதே!"

என்று சாராயக் கடைக்கு வந்தவனைத் தடுத்து நிறுத்திய சன்மார்க்கவாதியைப் பார்த்துக் கூறினான், திராவிற்கு இரண்டு பங்கு இலாபம் பெறும் அப்காரி கண்டிராக்டர்!

இப்படி இதோபதேசம் செய்யும் கன்னக்கோல் ஆசாமியும், அப்காரி கண்டிராக்டரும் நாட்டிலே நிறைய உண்டு!

அவரவர் தொழில் முறைப்படி அவரவரும் வாதம் செய்வர்!

கன்னக்கோல் வைப்பவனுக்கு மக்கள் தூங்க வேண்டியது அவசியம்; ஆகவே, காவற்காரனைக் கண்டதும், 'உழைத்தவர்களுக்கு உறக்கம் அவசியம்,' என்ற வாதத்தில் இறங்குவான்!

அதே மாதிரிதான் கள்ளுக்கடை கண்டிராக்டரும்! அவன் வருவாய் நிரம்பிக் கொண்டிருக்க, குடிப்பவன் பெருக வேண்டும்; ஆகவே, அந்தப் பழக்கத்தை ஒழிக்கப் பார்ப்பவனிடம், குடித்தவனின் மனோநிலையையும், பழக்கத்தின் பிடிப்பையும் பற்றி விவாதிப்பான்!

உழைத்தவனுக்கு உறக்கமும், மன அமைதியும் தேவைதான்; அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், கொண்டதைப் பறிகொடுக்காமலிருக்க காவற்காரன் அவசியமல்லவா?

மன அமைதிக்கு, உடலை உருக்கும் மது தேவையில்லையே!

இருந்தும், கன்னக்கோல் ஆசாமியும், கள்ளுக்கடைக் கண்டிராக்டரும் பசப்புகிறார்கள், மக்களிடம் அவர்களுக்குள்ள அக்கறையின் காரணமாக இதைக் கூறுவதாகக் கூறுவர்!

சேலத்தில் இப்படிப்பட்ட அக்கறை கொண்டோர், ஒருவர் முன்வந்துள்ளார்!

"மக்கள், கடவுளிடம் பக்தி போய், வேறு போக்கு நம்பிய மக் ... யின் ... யேன்? ... ... லாத ... குருக்கள் விட்டு ... செல்வோமே!"

என்று நேற்று முன்தினம் சேலத்திலே பெரிய ஆசாரியார் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்தப் பிரச்சினையிலும், கொண்டு வந்து புகுத்தப்படும் வாதம் இது!

"மக்கள் நம்பிக்கையோடு இருக்கின்றனர்; அந்த நம்பிக்கையை ஏன் குலைக்கிறீர்?"— என்று கேட்கப்படுவது, இன்று நேற்றல்ல; பல நாட்களாக!

எந்தச் சீர்திருத்தத்தையும் செய்ய முயலுபவோரைக்கும், நம் காதில் விழும் சொற்கள், இவை!

அவர் வாதம், ஒருவிதத்தில் சரியானதுதான்!

மக்கள், நம்பிக்கையோடு இந்து மத ஆச்சார விதிகளைப் பின்பற்றி நடக்கிறார்கள், வேத விதிப்படி, வியாசர் வழி வந்தோருக்கு விருந்து படைக்கின்றனர்; முப்புரி நூலோரின் தெய்வாம்சத்திற்குத் தான் பணிந்து நன்றியுக்கவராகின்றனர்; அறிவு வளரும் இந்த நாளிலும் ஐயன் திருவருள் பாடி, காவடி தூக்கின்றனர்; கச்சை முடித்து, கனவாடிகளுக்குக் காணிக்கைக் கொடுக்கின்றனர்; 'பிறந்தது பூமிக்குப் பாரம்; ஆகவே, இறப்புக்கு வழி தேடு,' என்று, வேங்கடம் வரை காவி தரித்து, தெருவோடு போகின்றனர்; படிப்பு, பட்டம், பதவி எல்லாம் பண்டிதன் முன் மண்டியிடுகின்றன!

தொந்தியைத் தடவி சோற்றுத் துருத்திகளாக வாழ்வோர் ஏற்றமடையவும், மற்றையோர் ஏய்க்கவும், இன்று மக்கள் வைத்திருக்கும் இந்து மத நம்பிக்கை, நன்கு பயன் படுகிறது.

இவ்வளவு அடிமைத்தனம் இருந்தும் மக்களுக்கு உணர்வில்லையே!

வேண்டாமென்றும், வெறித்த பார்வையுடன் குளக்கரை பக்கம் ஓடி, அங்கு நிற்கும் ஐயரிடம் அரையணா கொடுத்தாவது அமாவாசை தர்ப்பணம் செய்தாக வேண்டுமென்றுதானே என்று இருக்கின்றனர்!

'ஆரிய மொழியில் உள்ள அந்த மார்க்க விதியின், எவ்வளவு ஆபாசமும், ஆணவமும் நிறைந்தது தெரியுமா?'—என்றும், இளித்தவாயன் போல, 'எட்டப்பர், தேவாரத்தையும் திருவாசகத்தையும்,' என்று கூறி, அவைகளையும் தூக்கிக்கொண்டு, அதே மாதிரி அறிவுக்கொவ்வாத அனுஷ்டானங்கள் செய்ய ஆரம்பிக்கிறோமேதவிர, ஆராய்ந்தறிந்த புத்தியோடு ஆரிய மார்க்கத்தின் அறிவுக்கொவ்வாத முறைகளை சிந்திப்பதில்லை! ஆகவேதான், ஆச்சாரியார், அதனாலாக, 'மக்கள், நம்பிக்கையோடு மதவழி நிற்கின்றனர்,' என்கிறார்!

எல்லாம் வல்லவனாக கூறப்படும் இறைவன் இருக்கிறான், இந்த பாஷை என்ற பிரச்சினையெல்லாம் கவனிக்க வேண்டியது; அப்படியிருப்பதாக இறைவனுக்கு ஆலயம் ஏன் (?) அபிஷேகம் ஏன் (?) என்றெல்லாம் விசாரிக்க வேண்டாம்; அந்த இறைவனுக்கு இந்தத் தரகர்கள் ஏன் என்பது, எந்த சாதாரண மனிதனும் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதுதானே!

ஆண்டவன் படைப்பிலே உயர்வு—தாழ்வு கற்பிப்பது சரியா? அறிவுக்கொவ்வாத கட்டுக் கதைகளைத் தெய்வம் பணியாக்குவது மக்களை நல்வழிப்படுத்துமா?

இந்த அக்கிரம ஏற்பாடுகளை ஆராயாமல், நாட்டிலே இருக்கும் மக்கள் வேதம் கூறுவதையும், வியாசர் எழுதியதையும், மநு, யோட்டம் இட்டதையும் ஒத்துக் கொள்ளும்போது, 'நீ பாரம்பரிய நம்பிக்கையைக் குலைக்க,' என்று நம்மை அதட்டிக் கேட்கிறார் ஆச்சாரியார்!

பாவம்! வரிதாவகமான சூழ்நிலையில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் அவர், நம்மைப் பார்த்து கேள்வி கேட்பதைத் தவிர, வேறு யாரிடம் போய் கேட்பார்?

தமிழக அரசியலில், அதிகார காங்கிரஸ்மாகாட்சியை ஆட்சியின் நடத்துவதா, அம்பத்தூரிலே நடத்துவதா என்று சிசிகளும், செல்லாக் காசுகளாக இருந்தவை எழுந்து பேசிவருகின்றன; ஆனால், கொல்லை வழியே அழைத்து வரப்பட்டு, சொல்லாமல் விரட்டியடிக்கப்பட்ட ஆச்சாரியார், என்ன செய்வது; எங்கே ஒதுங்குவது என்று புரியாமல் தவித்த நிலையில், வைபதி புராணமும், கம்ப இராமாயணமும் தூக்கிக்கொண்டு, நாடு சுற்ற ஆரம்பித்துவிட்டார்; ஆனால், அவர் நாட்டைச் சுற்றுவதிலும் அர்த்தமிருக்கிறது!

ஜனங்களைத் தன் காலில் பணிய வைக்கும் சக்தி பெற்ற வேத விளக்கத்திற்கு மதிப்பிருக்கும்வரை, அவருக்கும், அவர் சந்ததியார்களுக்கும் நாட்டிலே ஆபத்தில்லை!

ஆச்சாரியாரை ஒழித்து சமூகத்தை மாத்திரம் என்ன செய்வார்?

ஸ்ரீ ரங்கத்திலே பூரண கும்பம், முனியிலே புண்ணிய தீர்த்தமும், இப்படி போகிற ஊரிலெல்லாம் பூஜை வரிசைகளும் அவருக்குப் பெறத் தயக்கமில்லையே!

இதுதான், ஆச்சாரியார் விரும்பும் நிலை! அவர் ஆளாவிட்டாலும், அவர் பரம்பரையினரின் ஆதிக்கம் போகவில்லை; ஆகவேதான், கூறுகிறார்—'மக்கள் மத நம்பிக்கையோடுதானிருக்கின்றனர்; நீ ஏனப்பா குலைக்கிறாய்?'— என்று!

"கூலி வாங்கிய தொழிலாளி நிம்மதியாக வீடு செல்லும்போது, அவனிடம் ஏன், 'முதலாளி சுரண்டுகிறான்,' என்று கூறுகிறாய்?"—என்று கூடத்தான் கேட்டனர்!

கேட்காமல் என்ன செய்வர், மாற்றானின் மூட நம்பிக்கையில் வாழ்வை சொகுசாக்கிக் கொண்டவர்?

மக்களை ஏமாளிகளாக்கி, அதில் வாழ்வமைத்துக் கொண்ட எத்தர்கள்!

பாமரன் அருளைக் காட்டி, பக்தி மார்க்கத்தை வளர்த்து, அதன் மேலே சிங்கார வாழ்வு வளர்த்துக் கொண்டவர், அந்த சிங்கார வாழ்வுக்கு சிதைவு ஏற்படுமென்றால், கன்னக்கோல் திருடனைப் போல்தான், மக்களைத் தட்டியெழுப்பும் அறிவுத் தூதர்களைச் சாடுவர்!

'அரசியலில் ஆதிக்கம் பறிபோனாலும், ஆகமத்தின் துணை கொண்டாவது அக்கிரகார ஆதிபத்தியத்தை நிலைநாட்டுகிறேன்,'—என்று புறப்பட்டுவிட்டார், முன்னாள் முதலமைச்சர்!

எடுபிடிகள் எஜமானர்களாகிவிட்டதோடல்ல, என்ன செய்வதென்று தெரியாமல், மடத்திற்கும், மசூதிக்கும், போதனைக்கும் புறப்பட்டுவிட்டார்!

அவருக்கு ஆசை, எப்படியாவது வேத முறையை நிலைநிறுத்திவிடலாம் என்று!

மக்கள், இன்னும், நாலு வேதத்தையே நம்பிக்கொண்டிருக்கின்றனர் என்று நினைத்துக்கொண்டு, பகுத்தறிவாளர் மீது தாக்குதல் ஆரம்பித்திருக்கிறார்!

ஆனால், ஆச்சாரியார் நினைப்பது போல, நாடு இல்லை, என்பது அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும்!

நாலு வேதத்தை நம்பிய காலம் மலையேறிவிட்டது!

கடவுள் பக்தியுண்டாக்க கோயிலுக்குக் கோயில் காவடி தூக்க யாம பக்தர்கள் சங்கம் அமைக்கிறதே, அவர்கள் கூடும் பிற்போக்குக் கொள்கைகளுக்கு நாட்டிலே செல்வாக்குக் குறைந்துவிட்டிருக்கிறது என்பதற்கு அத்தாட்சி!

நாடு விழித்துக் கொண்டது! மூடநம்பிக்கை தகர்ந்து கொண்டு வருகிறது! தன் நம்பிக்கை வளர்த்துக்கொண்டு வருகிறது!

வேத வழியின் விபத்தை தெரிந்தவன், சுயமரியாதையினன்; பகுத்தறிவுச் சுடர் தாங்கும் புரட்சிவாதி! தன் சகோதர மக்கள் தவறு வழியிலே இழுக்கப்பட்டுச் செல்லப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க மாட்டான்! அவர்களுக்குப் புகுத்தப்பட்ட மூடநம்பிக்கைகளைப் பகர்ந்து அறிவு மார்க்கத்திற்கு அழைத்து வந்தே தீருவான்!

கன்னக்கோல் திருடர்களின் இதோபதேசங்கள் அவனை அருந்தை மறைக்காது!

உரக்கக் கூறுவான்— 'உள்ள உரம் பெற்ற, மனுக் குலம் பேர,' வரீர்'— என்று! செத்தவுடன் எந்த லோகம் செல்வோம் என்பதை விட, இருக்கும்போது, உலகம் ... சிறைப்படும் காட்சியைத் தடுப்போமென்று!

நாட்டிலே நடக்கும் இந்தப் புரட்சியை ஆச்சாரியாரும், அவர் வழி நிற்போரும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்!

'விநாயக சதுர்த்தி' கொண்டாடி, கொழுக்கட்டையோடு விளையாடிய கோபாலகிருஷ்ணனின் கோமாளிக் காரியங்களுக்கு தக்கவாறு அறிந்தாலன்றி, இந்த மூட்சிப் புயலை அடக்க அவர்கள் முயற்சித்தால், பரிதாபகரமான எதிர்காலம் தான் அவர்களை வரவேற்கும்!

மக்கள் இன்னும் மூட நம்பிக்கையில் இல்லை; தன்னம்பிக்கையோடு காரியமாற்றத் தொடங்கி விட்டனர் என்பதை விரைவில் அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது!

இல்லையேல், புரட்சிப் புயலில் சிக்கிச் சாழிவர்!

உலகம் போகிற போக்கு!

சமரச கீதம்!

பங்கி வழியர்கள் பிரச்சினையில், இந்தியத் தொழில் அமைச்சர் கிரி, தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார்; ஆனால், நேரு, கிரியுடன் சமரசம் செய்து அவரது இராஜினாமாவை வாபஸ் பெற முயற்சிகள் நடைபெற்றன! இந்திய மந்திரி சபையில் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் ஏற்படுவது புதிதல்ல! சில மாதங்களுக்கு முன்னர், நிதி அமைச்சர் தேஷ்முக், சர்க்காருடன் தனக்கேற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக இராஜினாமா செய்யப் போகிறார் என்று செய்திகள் கூறின; பின்னர் தேஷ்முக்குடன், நேரு, சமரசம் செய்து கொண்டார். கட்ஜூவின் ராஜினாமாவும், கிட்வாய்—தேஷ்முக தகராறும் கிளம்பி, அடங்கிவிட்டன! மந்திரிகளிடையே ஏற்படும் கருத்து வேற்றுமைகள் சமரசமாகத் தீர்க்கப்படுவது, அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சி!

இதன் பலனாக அடிக்கடி இந்திய மந்திரி சபையில் 'ஒட்டு' வேலைகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சியிலே காணப்படும் திறமைப் பஞ்சம்தான் இதற்குக் காரணம்!

ஒரு பெரிய இயக்கமாக இருந்த காங்கிரஸ், இடையேறது 1947 ஆண்டில் கட்சியாக மாறிவிட்டது! காங்கிரசுக்கு தேசிய நோக்கமும், சில கொள்கைகளும் இருந்தாலும், அவை எதும் நடைமுறைக்குப் பயன்படும் தகுதி பெற்றவையாக இல்லை!

'காந்தீயப் பொருளாதாரம்,' என்று ஒரு திட்டத்தை காங்கிரசார் பிரச்சாரம் செய்தார்கள். அந்தப் பொருளாதாரம், இந்திய உபகண்டத்து மக்களின் மனதைக் கவரப் பயன்பட்டதேயன்றி, நடைமுறையில் அமுல் செய்ய இயலாது என்பதை நிரூபித்து விட்டது!

வெறும் நோக்குடன், இன்னதென்று வரையறுக்க முடியாத காங்கிரசின் லட்சியங்களை, சர்க்கார் பதவியில் அமர்ந்ததும், அவைகளை, நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்குப் பாதை அமைக்கும் முறையில் மாற்றியமைக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்ட காங்கிரசார், தங்கள் கட்சிக் கட்டுப்பாட்டை விட்டு விலகி, மாற்றுக் கட்சிக்காரர்களையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டு, ஐந்தாண்டுத் திட்டமொன்றை வகுத்தார்கள்; அத்திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைத்ததா என்றால், இல்லை. எதிர்

(3-ம் பக்கம் பார்க்க)

விதவையைத்தான் மணக்க வேண்டும்!

திருமணம் பற்றி மசோதா

மனைவியை இழந்த ஆண்கள், மீண்டும் திருமணம் செய்யும் போது, திருமணமாகாத இளம் பெண்களை திருமணம் செய்து கொள்வதைத் தடை செய்யும் மசோதா ஒன்று மக்கள் சபையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மனைவியை இழந்தவர்கள், விதவைகளையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பது தான் அந்த மசோதாவின் நோக்கம்!

வெள்ளச் சேதம்—சர்க்கார் முயற்சி

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதங்களினால் 247 பேர் மரணமடைந்தார்களென்று இந்திய மக்கள் சபையில் அமைச்சர் நந்தா கூறினார்.

7,700 கால்நடைகள் மாண்டன; 95 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்; மொத்த சேதம் ரூ 40 கோடி இருக்குமென்று நந்தா மேலும் தெரிவித்தார்.

இதுவரையில் ஐந்தேமுக்கால் கோடி ரூபாய் உதவித் தொகை பரவப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது!

வெள்ளக் கட்டுப்பாடு போர்டு ஒன்றை நியமித்து, அயருற்ற மக்களைப் புனரமைக்க மூன்று அம்ச திட்டம் ஒன்றை இந்திய சர்க்கார் வகுத்திருக்கிறார்களென்று தெரிகிறது.

ஆந்திராவுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி

அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஆந்திர மாநிலத்திற்கு மத்திய சர்க்கார் 920 லட்ச ரூபாய் கடனுதவி அளிக்க முன்வந்தது உண்மை என்று நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் மக்கள் சபையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: இந்திய சர்க்கார் வெளியிட்டுள்ள தேசியத் திட்டக் கடன், மாநில சர்க்கார்கள், மத்திய சர்க்கார் ஆகியவற்றின் தேவைகள் எல்லாவற்றிற்குமானதால், நடப்பு ஆண்டில் தனியாக வேறு பொதுக் கடன்களை வெளியிட வேண்டாமென்று மாநில சர்க்கார்களுக்கு யோசனை கூறப்பட்டது; மேலே கூறப்பட்ட 920 லட்ச ரூபாய் கடனுதவி தவிர, தேசியத் திட்டக் கடன் வசூல்களிலிருந்து ஆந்திராவுக்கு 2 5 கோடி ரூபாய் அளிக்கப்படும்.

கைவல்யம் நினைவுப் படிப்பகம்

29—8—54 மாலை 6 மணிக்கு மதுரை தமுக்கம் பூங்காவில் தோழர் ரா. ராசாராம் தலைமையில் படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, படிப்பக ஆண்டு விழாவை செப்டம்பர் திங்கள் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்றும், திரு—கொச்சி போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும், கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'சிந்தனை' படிப்பகம்

வேதாரணியம், செப். 1—

28—8—54ல் இப்படிப்பகத்தின் பொதுக் குழுக் கூட்டம் தோழர் டி. சுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, திரு—கொச்சி துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானவர்களின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும், திரு—கொச்சி அரசினரை கண்டித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மூன்று பிரெஞ்சு அமைச்சர்கள் இராஜினாமா!

ஈ. டி. சி. பிரச்சினையில் ஆறுபேர் வெளியேறினர்

மெண்டஸ் பிரான்சின் மந்திரி சபையிலிருந்து மீண்டும் மூன்று பேர் இராஜினாமா செய்துவிட்டார்கள் என்று தெரிகிறது.

இந்த மூவரும் ஐரோப்பியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஆதரிப்பவர்கள்.

ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று மெண்டஸ் பிரான்ஸ் முயற்சித்த போது, ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை எதிர்க்கும் மூன்று அமைச்சர்கள் இராஜினாமா செய்து விட்டார்கள்.

மந்திரி சபையில் ஏற்பட்ட காலி ஸ்தானங்களை மெண்டஸ் பிரான்ஸ் பூர்த்தி செய்துவிட்டார்.

எமானுவேல் டெம்பிள் என்பவர் புது பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

துரைசாமி—சாரதாமணி திருமணம்

தோழர் துரைசுவாமிக்கும்—தோழியர் சாரதாமணி அம்மைக்கும் 30-8-54ல், முசிறி அடுத்த குஞ்சாராயக்கன்பாளையம் மணமகன் இல்லத்தில், தி மு கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

மணமக்களைப் பாராட்டியும், சீர்திருத்த முறையில் திருமணங்கள் ஏன் செய்யப்படவேண்டுமென்பதை ஆதரித்தும் தோழர்கள் வி பராங்குசம், முசுவை ஆர். என். பாண்டியன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினார்கள்.

இறுதியாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், திருமணத்தை நடத்தி வைத்ததை ஒட்டி, மணமக்களுக்கு அறிவுரைகளும், திருமணங்கள் திருத்திய முறையில் நடத்தப்படுவது குறித்து பெரியவர்கள் கொண்டும் மனத்தாங்கல் எப்படித் தவறானது என்பதை விளக்கியும் விரிவுரை ஆற்றினார்.

மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துப் பத்திரங்களும் அளிக்கப்பட்டன.

நன்றி கூறலுடன் திருமண விழா இனிது முடிந்தது.

மணமக்கள் சார்பில், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு பொறுப்பாளர் அ. பொன்னம்பலனார் அவர்களிடம் ரூ 5 தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்

வரவேற்பு

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், திருமணத்திலிருந்து சென்னைச் செல்லும் வழியில், கோட்டூர் தி. மு. கழகத் தோழர்களால், மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார். பொதுச்செயலாளர் அவர்கள் கழகத் தோழர்களுடன் சிறிது நேரம் உரையாடிவிட்டுப் புறப்பட்டார்.

திருமண விழா முடிந்து திரும்புகையில், ஆமூர் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பொதுச் செயலாளரைச் சந்தித்து, குளிர்பானம் வழங்கி உரையாடிவிட்டு, வழி அனுப்பினர். (க. கி)

திருமணம்

நெல்லை மாவட்டம் வெர்பூர் தி மு கிளைக் கழக உறுப்பினர் தோழர் சிவசுப்ரமணியம் அவர்களது வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அனுப்பிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

உலகம் போகிற போக்கு! — (2-ம் பக்கத் தொடர்ச்சி)

காலக் கண்ணோட்டத்துடன், நாட்டிலே இதுவரை கிடைத்திருக்கிற அனுபவங்களையும் சேர்த்து திட்டமிடாததாலும், திட்டமிட்டோருடைய கருத்தும், அதை அமுல் செய்ய அதிகாரம் பெற்றிருப்போருடைய மனப்பாங்கும் ஒத்து வராததால், திட்டம் வெற்றி பெறவில்லை.

ஐந்தாண்டுகளில் உணவுப் பற்றாக்குறை நிவர்த்தியாகுமென்றார்கள்; மூன்றாண்டுகளிலேயே இப்பிரச்சினை தீர்ந்து விட்டதாகச் சொல்கிறார்கள்; இரண்டு ஆண்டுகள் முன்னதாகவே திட்டம் பலன் தருகிறதென்றால், அத்திட்டத்தில் நிச்சயம் குறைபாடு இருக்க வேண்டும்; திட்டமென்றால், குறிப்பிட்ட காலத்தில் முடிய வேண்டும்; அல்லது, சிறிது முன்னதாக முடியலாம்; இரண்டு ஆண்டுகளுக்கு முன்னமேயே நிறைவேறுமென்றால், அந்தத் திட்டம் தீட்டியவர்கள், சரியான கணக்குப் போடவில்லை; புள்ளி விவரங்களை சேகரிக்கவில்லை என்றுதானே அர்த்தம்?

ஐந்தாண்டுத் திட்டத்திலே மிகப் பெரிய அணைகளைக் கட்டினார்கள். வடக்கே இப்போது வெள்ளம் விளைவித்திருக்கும் கொடுமையைக் கூற முடியாது. பீகாரில் மட்டும் 19 கோடி ரூபாய் வெள்ள நிவாரணத்திற்குச் செலவாகியிருக்கிறதாம்!

ஐந்தாண்டுத் திட்டத்தில், பீகாருக்குச் செலவிடும் தொகை 42 கோடி ரூபாய்! ஒரு பக்கம் திட்டங்கள் நிறைவேறுகின்றன; மறு பக்கம் அழிவு வேலையும் நடைபெறுகிறது!

வடக்கே நிறைவேற்றப்பட்ட நதித் திட்டங்கள், பாய்ந்து வரும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் தன்மை பெற்றனவாக இல்லை! பணம் பாழாகியதுதான் மிச்சம்!

போதிய திறமையின்மையால் ஏற்பட்ட விளைவு இது! மாதம் ஒரு தடவை மந்திரி சபையிலே கருத்து வேற்றுமை வளருகிறதென்றால், எப்படி நிர்வாகத்திலே ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறை நிலவும் என்பது புரியவில்லை!

மந்திரிகளுக்கிடையே இலாகாக்களும் அடிக்கடி கைமாறி வருகின்றன. முக்கியமான பிரச்சினைகளிலே மந்திரி சபையில் ஒருமித்த போக்கு காணப்படவில்லை. ஏதாவது குறைபாடு ஏற்படுகிறதென்றால், நேரு தலையிட்டு, வேண்டுகோள் விட்டு, தற்காலிகமாக அமைதி நிலவுமாறு செய்கிறார்!

இந்த சமரசக் கீதம் நீடிக்கிறதென்றால் என்றுமே அவர்களால் வெற்றிக் கீதம் பாட முடியாது என்பது திண்ணம்!

★

பட்டினி சாவுகள் பதில் கூறுகின்றன!

"எல்லாம் சரியாகி விட்டது; இனி ஏதும் தொல்லை இல்லை; உணவு ஏராளமாகக் குவிந்து விட்டது; வெள்ளம் வந்தாலும் பாதகமில்லை; நாட்டிலுள்ள சர்க்கார் உணவுக் கிடங்குகளில் போதிய தானியம் சேமித்து வைத்திருக்கிறோம்," என்று உணவு அமைச்சர் கித்வாய் பேசுகிறார்.

பம்பாய் நிலைமையைப் பார்த்தால், கித்வாயின் கூற்று தவறு என்று தோன்றுகிறது. பம்பாயில் சென்ற 18 மாதங்களில் 73 தற்கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. 'வாழ்க்கை எனக்கு வேம்பாகிவிட்டது; ஆகவே, சாகிறேன்; என் மரணத்திற்கு யாரும் காரணம் அல்ல,' என்று கடிதம் எழுதிவைத்துவிட்டோ, 'காதலித்த காரிகையைக் கைபிடிக்க முடியவில்லை; மனமுடைந்து போனேன்; மாண்டு போகிறேன்,' என்று எழுதி வைத்து விட்டோ தற்கொலை புரிந்துகொண்டவர்கள் அல்ல, இந்த 73 பேர்களும்!

வேலை கிடைக்கவில்லை! பட்டினி!—இவைகளே, இவர்கள் மரணத்திற்குக் காரணம்!

'பசியின் பயம் இனி கிடையாது,' என்கிறார் கித்வாய்! பம்பாயில், 73 பேர் பட்டினிச் சாவுக்கு இரையானார்கள் என்று புள்ளி விவரம் பதில் தருகிறது!

மந்திரிகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேற்றுமை சமரசமாகத் தீர்க்கப்படுகிறது; ஆனால் கித்வாயின் பேச்சுக்கும், பட்டினிச் சாவுகள் கூறும் பதிலுக்கும் எப்படி சமரசம் ஏற்படப் போகிறதோ! நல்ல திட்டங்கள் தீட்டினோம் என்கிறார்கள்! 'நாதியற்று, 73 பேர், மணம் கொழிக்கும் பம்பாயிலே மாண்டு போனார்கள்,' என்று, செய்திகள், நம்மைப் பார்த்துக் கூறுகின்றன!

★

பிரான்சின் கலகம்!

ஈ. டி. சி. என்று அழைக்கப்படும் ஐரோப்பியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை, பிரான்ஸ், கடைசியில் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜெர்மனியை இராணுவ மயமாக்க அமெரிக்கா முனைகிறது; பிரிட்டன் அதை ஆதரிக்கிறது. ஜெர்மனிக்கு மீண்டும் இராணுவ வலிவு ஏற்படுமென்றால், அது, தன் மீதுதானே மீண்டும் பாயும் என்று பிரான்ஸ் எண்ணுகிறது!

ஐரோப்பாவில் தன்னை ஆதரிக்கும் இராணுவம் ஒன்று இருந்தால், அதன் மூலம், சோவியத் ஆதிக்கத்தைத் தடை செய்யலாம் என்று அமெரிக்கா எண்ணுகிறது!

சர்ச்சில் கூட, பிரெஞ்சுப் பிரதமரை அழைத்து, தன்னால் இயன்றதைக் கூறி அனுப்பினார்; ஆனால், பிரான்ஸ், ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது.

இதன் மூலம், அதிர்ச்சியடைந்திருக்கிற அமெரிக்காவுக்கு அபயம் அளிப்பது போல், பிரிட்டன், 'ஜெர்மனியை வட அட்லாண்டிக் நாடுகள் ஒப்பந்தத்தில் சேர்த்து விடலாம்,' என்று யோசனை கூறியுள்ளது!

பிரிட்டனின் இந்த ஆலோசனை பற்றி ஆராயும் முன்பாக அமெரிக்காவிற்கு மற்றொரு இடி விழுந்துவிட்டது!

'சீட்டோ' பற்றி அமெரிக்கா தயாரித்திருந்த நகல், முன்கூட்டியே மணிலாவில் வெளியாகி விட்டது. பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், 'சீட்டோ' பிரச்சினையிலும், அமெரிக்கா, தோல்வி அடைந்து விட்டது!

★

பாகிஸ்தான் 'வெடிகுண்டு!'

உலகில் அடிக்கடி இந்தியாவைப் பற்றிப் பேசுகிறார்களே என்று நினைத்த பாகிஸ்தான், தன்னையும் பற்றிப் பேசட்டும் என்று எண்ணி, மலேயாவுக்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்று உலக அரசியலில், பாகிஸ்தான் ஒரு 'கைவெடி குண்டை' வீசியிருக்கிறது; பிரான்சின் 'கலக'த்தினால், தனது எண்ணம் நிறைவேறாது போனதைக் கண்ட அமெரிக்கா, பாகிஸ்தான் வீசிய 'வெடிகுண்டு,' எப்படி வேலை செய்கிறது என்று வேடிக்கை பார்க்கிறது!

'ஈ. டி. சி. விஷயத்தில், பிரிட்டன், மெண்டஸ் பிரான்சை சரிக்கட்டவில்லை,' என்று அமெரிக்காவிற்கு பிரிட்டன் மீது உள்ளுக்குள் கோபம்; இந்த நிலையில், பிரிட்டனைத் தாக்கும் பாகிஸ்தான் போக்கை, அமெரிக்கா கூர்ந்து கவனிக்கிறது! ஒருக்கால், 'அமெரிக்க உதவிதான் வந்துவிட்டதே; இனி நமக்கு பிரிட்டனின் உதவி எதற்கு?' என்று எண்ணிக்கொண்டு, பாகிஸ்தான், மலேயா சுதந்திரம் பற்றிப் பேசுகிறதோ, என்னமோ!

பெட்டிப் பாம்பு போல் தன்னிடம் அடங்கிக்கொண்ட பாகிஸ்தானின் புதிய போக்கை, பிரிட்டன் எப்படி வரவேற்கிறதென்பது சீக்கிரமே தெரியும்! பொறுத்திருந்து பார்க்கலாம்!

—சிவம்

புரட்சி திருமணம்

30—8—54 காலை 11 மணிக்கு சர்க்கார் பதிவு பணிமனையில், பாதிரிமார்களின் பலத்த எதிர்ப்புக்கிடையே தோழர் பெரியநாயகசாமிக்கும்—தோழியர் ஜெயராமம்மாளுக்கும் பதிவுத் திருமணம் நடந்தேறிய பின், 139 எ. வி கோவில் தெரு (ராயபுரம்) விலுள்ள மணமகன் இல்லத்தில், தோழர் நா. மதியழகன் தலைமையில், தோழர் மு. ச. இளஞ்சேரன் மணமக்களைப் பாராட்டி பேசினார். இதன் நினை

கதா காலட்சேபம்

திருப்பூவாயடுத்த பெருந்தொழுவை இளைஞர் பாரதியார் கழக ஆதரவில், தோழர் மன்னர்குழுத் தலைமையில் தோழர் பொன்னையா "அரசாளப் பிறந்த மகன்" என்பது பற்றி இன்னிசைக் குழுவுடன் கதா காலட்சேபம் நடத்தினார்.

வாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அனுப்பிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

பொன்மலை திருக்குறள் கழகம்

29—8—54 மாலை 6½ மணிக்கு கழகச் சிறப்புக் கூட்டம் இரயில்வே படிப்பக மன்றத்தில் நடைபெற்றது. திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை 'திருவள்ளுவர் கொள்ளும் உடைமைகள்' எனனும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினார். 'வள்ளுவர் மதம்' எனனும் பொருள்பற்றி திரு. மாணிக்கவாசகத் தம்பிரான் பேசினார்.

போருக்கான ஏற்பாடுகளே இவை!

சீட்டோ பற்றி பீகிங் வானொலி குற்றச்சாட்டு

பிவான் எதிர்ப்பு

தேன் கிழக்கு ஆசியப் பாதுகாப்பிற்கான அமெரிக்கத் திட்டம் போருக்கான ஏற்பாடுதான் என்று பீகிங் வானொலி குற்றம் சாட்டியது.

சீனாவிற்கும் மற்ற ஆசிய நாடுகளுக்கும் எதிராக இராணுவ ஆக்கிரமிப்பு கோஷ்டியை அமைப்பதே அமெரிக்காவின் நோக்கம். கம்யூனிச எதிர்ப்பு என்ற பெயரால், இராணுவ கோஷ்டிகளை அமைத்தும், மற்ற நாடுகளின் சுதந்திரத்திலும், உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிட்டும், கூட்டு சமாதான முயற்சியை சீர்குலைத்தும், சர்வதேச கொந்தளிப்பை ஏற்படுத்தியும் தங்கள் பலாத்காரக் கொள்கையை நிறைவேற்ற அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் முயற்சி செய்கின்றனர் என்று பீகிங் வானொலி மேலும் கூறுகிறது.

கழகக் கூட்டம்

★

அண்ணாமலை நகர்

திருவேட்களக் குளக்கரையில
7—9—54 மாலை 4-30 மணிக்கு
தலைவர்: தில்லை — வில்லாளன்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

பிவான் எதிர்ப்பு

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் இடதுசாரித் தலைவரான பிவான், ஜப்பான் சோஷலிஸ்டு கட்சி அளித்த வரவேற்பில் பேசுகையில், கீழ்க் கிழக்கு நாடுகள் எதையும் விலக்கிவிட்டு அமைக்கப்படும் கூட்டுப் பாதுகாப்பு எதுவும் சமாதானத்தை ஏற்படுத்தாது என்று கூறினார்.

கட்சிய ரீதியில் பிரிட்டிஷ் தொழிற்கட்சிக்கு அமெரிக்காவுடன் பல வேறுபாடுகள் உண்டு. ஆனால், அது, ஹைட்ரஜன் குண்டுகளை உபயோகித்த நிலை கண்டு தீர்த்துக்கொள்வதில்லை. அதுபோலவே கம்யூனிஸ்டு நாடுகளுக்கும் மற்ற நாடுகளுக்கும் இடையேயுள்ள லட்சிய வேறுபாடுகளையும் இக்குண்டுகள் மூலம் தீர்த்துக்கொள்ள முடியாது என்று பிவான் மேலும் கூறினார்.

சியாங் தீவு மீது சீனர்கள் குண்டுவீச்சு

அமெரிக்க விமானத்தை ரஷ்யா சுட்டது

வாஷிங்டனில் அமெரிக்க தலைவர் ஆலோசனை

வாஷிங்டன், செப். 5—

கம்யூனிஸ்ட் வெள்ளிக்கிழமை பன்று தேசிய சீனர் வசமுள்ள குமாய் தீவின், மீதக்கும் அதைகைய நாசப்படுத்தியதாகவும், ஒரு பீரங்கிக் கப்பல், மூழ்கும் கப்பல் ஆகியவற்றை கம்யூனிஸ்டு சீன விமானங்கள் குண்டுமாரி பொழிந்து நாசமாக்கியதாகவும், சீன செய்தி நிலையம் அறிவித்திருக்கிறது.

★

குமாய் தீவின் மீது சீனக் கரையோர பீரங்கிகள் குண்டுமாரி பொழிந்தது பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் தற்காப்பு இலாகா அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

ஜப்பான் கடலில் ஒரு அமெரிக்க விமானம், எம ஐ ஜி. 15-ம் ரகத்தைச் சேர்ந்த இரு ஜெட் விமானங்களால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க தற்காப்பு இலாகா அறிவித்திருக்கிறது. விமானத்திலிருந்த 9 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர் என்றும், ஒருவரைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்க விமானம் ரோந்து வேலையில் ஈடுபட்டிருந்ததாகவும், விளாடிவாஸ்டாக்கிற்குக் கிழக்கில் 100 மைல் தூரத்தில் ரஷ்ய விமானங்களால் தாக்கப்பட்டதென்றும், இச்சம்பவம் நேற்று இரவு 6-18 மணிக்கு நிகழ்ந்ததாகவும் தெரிகிறது.

★

சோவியத் ரஷ்யாவின் எல்லையை மீறி வந்த அமெரிக்க விமானம் ஒன்றைச் சுட்டதாக மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவரிடம் ஆட்சேபம் தெரிவிப்பதென்று ரஷ்ய சர்க்கார் செய்திருக்கிறதாம்.

அமெரிக்க விமானம் முதலில் சுட்டதாகவும், எல்லையை மீறி வந்து தற்காப்பு விமானங்கள் மீது சுடத் தொடங்கியதாகவும் ரஷ்ய அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது.

திரு. வி. க. நினைவு நாள்

காஞ்சிபுரம் வேண்டுகோள்

17—9—54 வெள்ளிக்கிழமை வருகின்ற திரு. வி. க. அவர்களின் நினைவு நாளை, பல்வேறு மன்றங்களும் ஒன்றுசேர்ந்து சிறப்பு முறையில் கொண்டாட வேண்டுமென சென்னை நகர மன்றத் தார் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

பொதுச்செயலாளர் பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இல்லை; வெட்டாத திருக்குளமில்லை! வணங்காத தெய்வமில்லை; அந்தத் தெய்வங்களுக்கு வைரத்தாலே முடி; தங்கத்தாலே ஒளி; வெள்ளியாலே வாகனம்—அதனையும் தந்தோம்! எனினும், இந்த நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி இருப்பானேன்? இத்தகு காலத்தில்தான் நாஸ்திகர்களாகிய நாங்கள் இருக்கிறோம்; அந்தக் காலத்தில், தாது வருடப் பஞ்சம் வரவில்லையா? எனவே, பசிக்கும்—பட்டினிக்கும் காரணம், நாம் கடவுளை மறந்ததால அல்ல, என்பது தெரியவில்லையா?

"பின்னர், தேசியவாதிகளைக் கேட்டோம்—'பஞ்சம் ஏன், பட்டினி ஏன்,' என்று! அவர்கள் சொன்னார்கள்—'இந்த நாட்டு செல்வத்தை 6,000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஆங்கிலேயன் சுரண்டிச் செல்கிறான்; அவன் ஒழிந்தால்தான், இந்த நாட்டவரை வாட்டும் பஞ்சம் ஒழியும், பசி நீங்கும,'—என்றார்கள்! அவர்கள் விரும்பியபடியே வெள்ளையனை விரட்ட, இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலுமிருந்து 60,000 பேர் சிறை சென்றனர்; தென்னாட்டிலே, சிதம்பரம் பிள்ளை சிறையில் செக்கிழுத்துச் செத்தார்! குமரன் குண்டாந்தடி அடிபட்டு திருப்பூரிலே மாண்டான்! பெரியார், பன்முறை சிறையில் வாடினார்! வெள்ளையனும் வெளியேறினான்! ஆண்டுகள் ஏழு உருண்டோடிவிட்டன, சுயராஜ்யம் கிடைத்து!

"அந்த ஏழு ஆண்டுகளில், பாட்டாளியின் கஷ்டம் நீங்கிற்றா?—உழைப்பவனுக்கு உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் கிடைத்தனவா?—என்றால், நிச்சயமாக இல்லை! எனவேதான், நாட்டு மக்கள் நம்மைக் கேட்டார்கள்—'எங்களுக்கு வாழ்வு இல்லையா?'—என்று!

"தி. மு. கழகம் அவர்களுக்குச் சொல்லுகிறது—'நமக்கு வாழ்வு கிடைக்காத காரணம் மூன்றுண்டு; ஒன்று, நம் சக்தி நமக்குத் தெரியவில்லை; இரண்டு, நாம, நம் உழைப்பைத் திருடுபவனை யார் என்று கண்டுபிடிக்கவில்லை; மூன்று, நம்மை கவனிக்கும் அக்கறை கொண்ட சர்க்கார் நமக்கில்லை;—இவை மூன்றும் நாட்டு மக்களால் நன்கு புரிந்துகொள்ளப்பட்டால வாழ முடியும்—என்று திராவிட முன்னேற்றக் கழகம் நம்புகிறது,"

—என்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள், நமது சக்தி இருக்கும், நம் உழைப்பை யார் யார் திருடுகிறார் என்பதையும்; 31-8-54-ல், துறையூர் நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விளக்கி கூறிவிட்டு, இப்போதிருக்கும் சர்க்கார், எப்படி நாட்டு மக்களிடம் அக்கறை கொண்ட சர்க்கார் அல்ல என்பதை விளக்கினார். (தொடரும்)

அன்பழைப்பு

தோழர்,

9—9—54 காலை, விருத்தாசலம் கோட்டைவெளி வீதி, 6-எண்ணுள்ள இல்லில் தோழியர் ஆண்டாள் அம்மையை, சிதம்பரம் — மாவட்ட துணைப் பதிவாளர் முன்னிலையில், என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் பதிவு மண விழாவிற்கும், அன்று மாலை 6 மணிக்கு நடைபெறும் சிதம்பரம் இசைவாணர் சி. எஸ். ஜெயராமன் அவர்களின் இன்னிசைக்கும் வந்திருந்து சிறப்பிக்குமாறு அன்புவாழ்த்துடன் அழைக்கிறேன். தவறாது வரும்படி அன்புடன் அழைப்பு விடுத்தலாகக் கருத வேண்டுகிறேன்.

காஞ்சிபுரம், 1—9—54 } ஆசைத்தம்பி கண்ணன்
அன்பு ஆசிரியர் 'திராவிட நாடு'

அக்டோபர் 25-ல்!
நேஷனல் பிக்சர்சார்
தென்னாட்டுத் திரைப்பட வரலாற்றில் மீண்டும் ஒரு பொன் ஏடு படைக்கிறார்கள்

M.R.ராதா நடிக்கும்
ரத்தக்கண்ணீர்
டைரக்ஷன் கிருஷ்ணன் பஞ்சு
கதை, வசனம் திருவாரூர் K. தங்கராசு

வடவர் உயர வகுத்த......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறதாம்!

'குழந்தைகள் வெள்ளத்திலே போய்விட்டனர்; குடியிருந்த வீடோ போன இடம் தெரியவில்லை; நிற்க முடியவில்லை; உட்கார இடமில்லை,'

என்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மனிதன் கதறி அழுகிறான்; பண்டிதர் பேசுகிறார்—"நாசம் விளைவித்தாலும், வெள்ளம், பூமியைச் செழிப்பாக்குகிறது"—என்று!

பீஹாரில், ரூ. 40 கோடி; அசாமில், ரூ 20 கோடி; மேற்கு வங்கத்தில், ரூ. 30-கோடி என்ற அளவில நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம் என்று வெள்ளச் சேதத்திற்குக் கணக்கு சொல்கிறார்கள்!

பீகார் சர்க்கார் மட்டும், கடந்த ஐந்து ஆண்டுகளிலே 19 கோடி ரூபாயை வெள்ள நிவாரணத்திற்காக செலவிட்டிருக்கிறார்கள்.

"இத்தனை நாசத்தையும், வெள்ளம் அடித்துக்கொண்டு வரும் வண்டல் மண் சரிக்கட்டும்,"—என்று, புதிய வரவு-செலவு போடுகிறார், நேரு பண்டிதர்!

'வெள்ளம்தான் பூமியைச் செழிக்கச் செய்யப்பட வேண்டுமா? உரமிட்டால் நிலம், வளமடையாதா? வாழ்வு போய்விட்டதே, இனி என்ன செய்வது? உலகமே அழியப்போகிறதோ?"

என்று, பலர் ஏங்கி நிற்கும் நிலையைத் தடுத்திருக்க முடியாதா?

"பயிர்கள் பாழாகி விட்டன; தேயிலைத் தோட்டங்கள் மணல் மேடாகிவிட்டது,"—என்று செய்திகள் கூறும்போது, பண்டிதர், 'பரவாயில்லை; பூமி செழிக்கும்,' என்கிறார்!

இது என்ன பொருளாதாரத் தத்துவமோ! ஒருக்கால் காந்தியப் பொருளாதாரத்தின் கடைசி அத்தியாயமோ!

முன்பொரு நாள், லண்டன் மாநகரில், பெருந் தீயினால், அந்த நகரமே பாழாகிவிட்டது; ஆனால், பின்னர், அந்த நகரம் புது முறையில் கட்டப்பட்டது.

பின்னால் வந்த வரலாற்று ஆராய்ச்சியாளர்கள், 'அப்பெருந் தீயால்தான், லண்டன் பெரும் நகரம், பொலிவு பெற்றது,' என்றனர்; ஆனால் பெருநாசத்தை பொழுகாக்க நினைப்பவர் எவரும், பெருநெருப்பை வாவென்று அழைக்க மாட்டார்கள்!

இந்தியப் பிரதமரோ, வெள்ளத்தில வரவு-செலவு கணக்கும் பார்க்கிறார், நிலைமையை மறந்து!

திறமையற்ற முறையில் பல திட்டங்களைத் தீட்டி, 'நம இந்தியாவை நிர்மாணிக்கும் மகோன்னத வேலையில் பங்கேற்பீர்; பணம் தருவீர்,' என்று ஊர் முழுமையும் அச்சடித்து ஒட்டிய பின்னர், இப்போது, 'அவசரமாகத் திட்டம் தீட்டினோம்; வீணான பழியானது தான் மிச்சம்; இனிமேல் அப்படி நடக்க கூடாது,' என்று பேசுவதா, மக்கள் நலனில் அக்கறை கொண்டோரின் பண்பு?

இசை மாற்றம்

பாகிஸ்தான் போக்குவரத்து திசையில் மாற்றம் ஏற்படுமென தெரிகிறது.

'இடது பக்கம் போகவும்,' என்பதை, 'வலது பக்கம் போகவும்,' என்று மாற்ற இருக்கிறார்களாம். வானொலியில் பேசுகையில் பாக் பிரதமர் இதைக் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இரா சேதிரு சேதுராமன், கல், நே, ... அவர்களுக்கு, அழகிய அச்சுக்கூடம் செயலாளர் (தே. தூக் சார்பாக வெட்டுத் தொழிலாளர் ......) விடுவிக்கப்படுகிறது. ஆசிரியர்: இ. என். ஆ ...... ஆர்.